செய்தி வெளியீடு எண்: 812 நாள்: 08.10.2026

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு.N.ஆனந்த் அவர்கள் தலைமையில் சென்னை, கலைவாணர் அரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் வெற்றித் தமிழகம் – தொலைநோக்கு ஆவணம் – செயல்திட்ட முன்னெடுப்பு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து 11 மாவட்டங்களுக்கான "முதல் மண்டல மாநாடு" நடைபெற்றது.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி, இன்று (08.10.2026) சென்னை, கலைவாணர் அரங்கில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு.N.ஆனந்த் அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் வெற்றித் தமிழகம் – தொலைநோக்கு ஆவணம் – செயல்திட்ட முன்னெடுப்பு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து 11 மாவட்டங்களுக்கான (காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர்) "முதல் மண்டல மாநாட்டில்" அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு.N.ஆனந்த் அவர்கள் இக்கூட்டத்தில் தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவுப்படி, இந்த ஆய்வுக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மதிப்பிற்குரிய ஊரக வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சித் துறையின் ஆணையர், கூடுதல் இயக்குநர்கள், கூடுதல் ஆட்சியர்கள், திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் **"வெற்றித் தமிழகம் (Vision Vetri Tamizhagam)"** என்ற வளர்ச்சி ஆவணத்தை உருவாக்கியுள்ளது. அந்த தொலைநோக்கு இலக்குகளை அடையும் வகையில், நமது அரசு பொறுப்பேற்றதில் இருந்து ஊரக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஊரக மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு நடவடிக்கைகளை நமது அரசு விரைவாக மேற்கொண்டு வருகிறது. 2026-2027 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து திட்டங்களையும் குறித்த காலத்தில் விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள். எனவே, அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசுக்கு நற்பெயர் ஈட்டித்தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## தமிழ்நாடு கிராம மேம்பாடு, மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (TN–VETRI) திட்டம்

- நடப்பு நிதியாண்டில், நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசு தமிழ்நாடு கிராம மேம்பாடு, மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (TN–VETRI) என்ற முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு கிராமப்புற மக்களின் தேவைகளை முழுமையாகவும், துல்லியமாகவும், அவர்களின் பங்கேற்புடன் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்த ஊரக பங்கேற்பு மதிப்பீடு (PRA)–ன் மூலம் மாவட்ட அளவிலான திட்டமிடல் பயிற்சி 05.10.2026 அன்றும், வட்டார அளவிலான திட்டமிடல் பயிற்சி 06.10.2026 அன்றும் வழங்கப்பட்டு, குக்கிராம அளவில் 07.10.2026 முதல் 17.10.2026 வரை ஊரக பங்கேற்பு மதிப்பீடு (PRA) பணி நடைபெற்று வருகிறது.

- எனவே, அதில் மக்களின் பங்கேற்பினை உறுதி செய்து கிராமங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை மற்றும் எதிர்பார்ப்பு தேவைகளை சரியான முறையில் கண்டறிந்து அந்தந்த ஊராட்சிகளுக்கான முழுமையான திட்டத்தினை உருவாக்கிட வேண்டும்.

## வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார (VB–GRAM (G)) திட்டம்

- வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார (VB –GRAM (G)) திட்டத்தின் கீழான வேலைவாய்ப்பினை நம்பி பெரும்பாலான ஊரக மக்கள் உள்ளதால் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தொடர்ச்சியாக வேலை வழங்கி உரிய காலத்திற்குள் அவர்களுக்கான ஊதியத்தை வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், தொழிலாளர்களுக்கு தாமதமின்றி ஊதியம் அவர்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

- தமிழ்நாடு நீர் ஆதாரத்திற்காக பெரும்பாலும் வடகிழக்கு பருவ மழையை நம்பியுள்ளதால் அக்காலத்தில் பெய்யும் மழையை சேமிக்க தற்போது நடைபெற்று வரும் புதிய குளங்கள் அமைத்தல், பாரம்பரிய நீர் நிலைகள் தூர்வாருதல் மற்றும் பாசன கால்வாய்களின் புனரமைப்பு பணிகளை வடகிழக்கு பருவ மழை தொடங்கும் முன் முடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- ஊரக பகுதிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உடனடியாக தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## வடகிழக்கு பருவமழைக்காலங்களில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- வடகிழக்கு பருவமழை காலங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களின் செயல்பாடுகள் மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே, ஊராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலர், மக்கள் நல பணியாளர், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள், பணித்தளப்பொறுப்பாளர்கள், ஊக்குநர்கள் அவரவர் பகுதிகளில் பருவமழை காலங்களில் உள்ள நிலவரம் குறித்து உடனுக்குடன் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தகவல் தெரிவிக்கவேண்டும்.

- சிறுபாலங்கள் உள்ளிட்ட வெள்ளநீர் வெளியேற்றும் வழிகளை சுத்தம் செய்யவேண்டும். மேலும் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்றம் செய்வதற்கு மோட்டார்கள் மற்றும் JCB உள்ளிட்ட இயந்திரங்கள் மற்றும் காற்றினால் மரம் விழுந்தால் அவற்றை வெட்டி அப்புறப்படுத்த எரிபொருளுடன் கூடிய மின் ரம்பங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். ஊரக வளர்ச்சி துறையின் நீர்நிலைகள் அனைத்தையும் கண்காணிப்பதற்கு – ஊராட்சிவாரியாக அனைத்து நிலை அலுவலர்களையும் பொறுப்பாக்கி உத்தரவிடவேண்டும்.

- மழைக்காலங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்வது மிக மிக முக்கிய பணியாகும், அனைத்து நீர்தேக்கத் தொட்டிகளும் சுத்தம் செய்யப்பட்டு போதுமான அளவு குளோரின் கலக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்வதை உறுதி செய்யவேண்டும். மழைக்காலங்களில் திடக்கழிவு மேலாண்மை பணியும் தங்குதடையின்றி நடைபெறவேண்டும்.

- புயல் பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் இருப்பதுடன் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு உணவு தயாரிப்பதற்கு தேவையான முன்னேற்பாடு வசதிகள் உறுதி செய்யப்படவேண்டும். அலைபேசி செயலிகள், சமூக வலைதளங்கள், செய்தித்தாள்கள் மற்றும் மனுக்கள் மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் குறைகளுக்கு முன்னுரிமை அளித்து அவசரம் மற்றும் சேதத்தின் தீவிரத்தின் அடிப்படையில் அவற்றை சீரமைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

## டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் – கள செயல்பாடு மற்றும் குடிநீர் பாதுகாப்பு

- மழைக்காலங்களில் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் DBC பணியாளர்களை ஈடுபடுத்தவேண்டும். மேலும், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார மருத்துவ அலுவலர் மற்றும் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் இணைந்து டெங்கு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

- நீர் தேக்கம், பயன்பாடற்ற பொருட்களில் மழைநீர் மற்றும் கழிவுப் பொருட்கள் உள்ளிட்ட கொசு உற்பத்தி மூலங்களை ஊராட்சிவாரியாக கண்டறிந்து உடனடியாக அகற்றுதல் வேண்டும். நோய்த் தொற்று தொடர்பாக அதிக புகார்கள்

வரும் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து தீவிர கொசு ஒழிப்பு, தூய்மை மற்றும் மருந்து தெளிப்பு மேற்கொள்ளுதல் வேண்டும்.

- பிளீச்சிங் பவுடர், கொசு ஒழிப்பு மருந்துகள் மற்றும் இதர சுகாதாரப் பொருட்கள் தேவையான அளவில் ஊராட்சிகளில் இருப்பில் வைக்கப்பட வேண்டும்.

- வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் தொடர்ந்து கள ஆய்வு செய்ய வேண்டும். உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) வட்டாரவாரியாக முன்னேற்றத்தை ஆய்வு செய்து குறைபாடுகளை சரிசெய்ய வேண்டும்.

## சாலை பராமரிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

- நம் மாநிலத்தில் வடகிழக்கு பருவமழை எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்களின் பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்வதற்காகத் தீவிர சாலை பராமரிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

- முறிந்து விழுந்த அல்லது ஆபத்தான நிலையில் உள்ள காய்ந்த மரங்களை அகற்றவேண்டும். பக்க கால்வாய்கள் (side drains) மற்றும் குறுக்கு வடிகால் அமைப்புகளில் (cross–drainage works) உள்ள வண்டல் மண், குப்பைகள், அடைப்புகள் ஆகியவற்றை சுத்தம் செய்து மழைநீர் தடையின்றி ஓடுவதை உறுதி செய்ய வேண்டும். தேவையான இடங்களில் சாலை ஓரங்களை (road shoulders) சீரமைப்பதுடன் சாலைகளில் உள்ள மேடு பள்ளங்களை சரி செய்ய வேண்டும்.

## பாதுகாப்பான குடிநீர் விநியோகம்

- ஊரகப் பகுதிகளில் எவ்விதத் தடங்கலுமின்றி தினசரி குடிநீர் விநியோகத்தை உறுதி செய்தல் வேண்டும். ஊராட்சிகளில் குடிநீர் விநியோகத்தை தினசரி கண்காணிக்க வேண்டும்..

- குடிநீர் வழங்கல் பழுதுபார்ப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- கிராமப்புற வீடுகளுக்குக் குடிநீர் விநியோகம் செய்வதற்கு முன், அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் (OHTs) குளோரினேஷன் (Chlorination) கட்டாயம் செய்யப்பட வேண்டும்.

- கிராமப்புற வீடுகளுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் (OHTs) 15 நாட்களுக்கு ஒருமுறை (Fort–night) கட்டாயமாக சுத்தம் செய்யப்பட வேண்டும்.

- ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்குத் தேவையான **55 லிட்டர் (55 LPCD)** குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- குடிநீரின் **அளவு மட்டுமல்ல, தரமும்** சம அளவில் முக்கியம்.
- பாதுகாப்பான, குடிக்கத் தகுந்த குடிநீர் வழங்குவதே **அரசின் தலையாய முன்னுரிமை** என்பதை எப்போதும் நினைவில்கொள்ள வேண்டும்.

## பொதுமக்களின் குறைகளுக்குத் தீர்வு

- அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்கோரி வரும் பொதுமக்களின் மனுக்களுக்கு **வட்டார அளவிலேயே உடனடியாக** நடவடிக்கை எடுத்து, ஒவ்வொரு மனுவுக்கும் **முறையான ஒப்புகை** வழங்க வேண்டும்.
- **உடனடியாகத் தீர்க்கக்கூடியவை:** தெருவிளக்கு பழுது நீக்கம், ஆழ்துளைக் கிணறு மோட்டார் பழுது நீக்கம், வேலை அட்டை (Job Card) வழங்குதல் போன்றவற்றைக் காலதாமதமின்றி உடனே செய்து முடிக்க வேண்டும்.
- **கால அவகாசம் தேவைப்படுபவை:** புதிய அங்கன்வாடி மையம், நியாய விலைக் கடை, சாலைகள் அமைத்தல் போன்ற கோரிக்கைகளை முறையாகப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மக்கள் பிரதிநிதிகள் தரும் கோரிக்கைகளை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க வேண்டும்.
- புனல் (Punal) இணையதளம் மற்றும் ஊராட்சி மணி (Ooratchi Mani, கட்டணமில்லா தொலைபேசி எண்–155340) போர்ட்டல் வழியாகப் பெறப்படும் குடிநீர் வழங்கல் உள்ளிட்ட அனைத்துக் குறைகளும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

## வெளிப்படையான நிர்வாகம்

- வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில், நிர்வாகம் **வெளிப்படையாக** இருக்க வேண்டும்; ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்தின்படி (Transparency in Tender Act) செயல்பட வேண்டும். தவறு செய்யும் அலுவலர்கள் மீது உடனடியாக துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் ஊரக நூலகங்கள் **உரிய நேரத்தில்** திறக்கப்பட வேண்டும்.
- ஊராட்சி அளவில் **குறைதீர்ப்புப் பதிவேடு** பராமரித்து, ஒவ்வொரு குறையின் மீதும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு

- குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் (CDPO), வட்டார மருத்துவ அலுவலர், வட்டார வேளாண்மை அலுவலர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD), மின்சார வாரியம் (EB) உள்ளிட்ட பிற துறைகளின் வட்டார அளவிலான அலுவலர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் **ஒருங்கிணைந்து** செயல்பட வேண்டும்.

- குடிநீர், கழிவுநீர் வடிகால், தெருவிளக்கு, குப்பைக் குவியல் போன்ற அடிப்படை வசதிகள் குறித்த ஊரக மக்களின் குறைகளுக்கு இந்த ஒருங்கிணைப்பின் மூலம் தீர்வு காண வேண்டும்.

## பொறியியல் பிரிவு

- உதவிப் பொறியாளர்களும் பொறியியல் பிரிவும் **ஊரக வளர்ச்சித் துறையின் முதுகெலும்பு**.

- அனைத்து அடிப்படை உட்கட்டமைப்புகளும் முறையாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

- ஒவ்வொரு பணியின் அளவையும் **தரத்தையும்** உறுதி செய்துகொள்ள வேண்டும்.

## நிறைவாக,

- அரசாங்கத்தின் நலத்திட்டங்கள் அனைத்தும், கடைக்கோடி கிராமத்தில் உள்ள சாமானிய மனிதனையும் சென்றடையும் பாலமாக அனைவரும் செயல்பட வேண்டும்.

- குடிநீர், சாலை, தூய்மை, வறுமை ஒழிப்பு மற்றும் பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்கள் என கிராமங்களின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் பெரிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

- தினமும் நீங்கள் கையெழுத்திடும் ஒவ்வொரு கோப்பும், எடுக்கும் ஒவ்வொரு முடிவும் ஒரு ஏழை குடும்பத்தின் வாழ்க்கையில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

- **நான் உங்களை நம்புகிறேன்**. ஊராட்சி ஒன்றியத்தின் முழுமையான வளர்ச்சிக்கான உங்களது அயராத பணியை நான் மனதார பாராட்டுகிறேன். **உங்கள் ஒவ்வொரு முயற்சியும் ஒரு கிராமத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.**

- நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வளர்ச்சியடைந்த தமிழகத்தை உருவாக்கி தமிழகத்தை இந்தியாவின் முன்மாதிரியான மற்றும் முன்னோடி மாநிலமாக மாற்றும் நமது இலக்கினை அடைய நம்மை அர்ப்பணித்து நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம் என இத்தருணத்தில் உறுதி ஏற்போம்.

- **நாம் அனைவரும் ஒரு குழுவாக இணைந்து, மக்களுக்கான சேவையை மனநிறைவுடன் தொடர்வோம்.**

- "ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் கிராமங்களின் வளர்ச்சியிலேயே அடங்கியுள்ளது. அந்த கிராமங்களின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் முதன்மைச் சிற்பிகள் நீங்கள். உங்கள் பணி சிறக்கட்டும் தமிழ்நாடு வளரட்டும்"

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் **திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப.,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்கக ஆணையர் (பயிற்சி) **டாக்டர் ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப.,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்கக ஆணையர், **திருமதி வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,** தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேலாண்மை இயக்குநர் **மரு. மா. ஆர்த்தி, இ.ஆ.ப.,** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் அரசு ஆலோசகர் முனைவர் ஜி. பழனிதுரை, கூடுதல் இயக்குநர்கள், தலைமை பொறியாளர்கள், இணை இயக்குநர்கள், கூடுதல் ஆட்சியர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள், மகளிர் திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் திட்ட – உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu